# திருக்குறள் காட்டும் "காலம்"

***முனைவர் அ. நந்தினி***
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம் செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

### முன்னுரை

மனித வாழ்வியலில் நீக்கமற நிறைந்துள்ளதாகக் காலத்தின் ஆதிக்கம் இருக்கின்றது. தமிழன் காலத்தை இறப்பு, நிகழ்வு, எதிர்வு என வகைப்படுத்தியுள்ளான். மனிதனது ஆயுட்காலத்துள் மீண்டும் அவன் திரும்பப் பெற முடியாதது காலமாகும். காலமறிந்து செயலைச் செய்தால் எக்காரியமாயினும் அது வெற்றியைத் தரும். எனவேதான் வள்ளுவப் பெருந்தகை காலமறிதல் என்றொரு அதிகாரத்தைப் படைத்து அதன் முக்கியத்துவத்தை உலகிற்குத் தெளிவுபடுத்தியுள்ளார். இன்றைய நவீன காலத்தில் நேர மேலாண்மை (Time Management) என்பது தொழில் நிறுவனங்களில் முக்கியமாகப் பார்க்கப்படுகின்றது. மனிதனின் நடத்தையைத் தீர்மானிக்கும் பல்வேறு கூறுகளுள் ஒன்றாகக் "காலத்தைச் சரியாகப் பயன்படுத்துவதும்" இருப்பதைக் காணலாம். காலத்தை இழந்தவன் அனைத்தையும் இழந்தவனாகின்றான். அத்தகு பெருமை பெற்ற காலத்தின் அருமைகளைத் திருக்குறள் வழி நின்று விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

### காலம் குறித்த சிந்தனை

தமிழிலக்கியங்களைப் பொறுத்தவரை அதன் தொடக்க காலம் முதலாகவே காலம் குறித்த சிந்தனைகள் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் முதற்பொருளைப் பற்றிக் கூறும்பொழுது,

"முதலெனப்படுவது நிலமும் பொழுதும்" (தொல்.பொருள். நூற்பா - 905) என்கிறார் தொல்காப்பியர். மேலும் அந்நிலம் குறித்துப் பேசும்போது,

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே** ***(மேலது. நூற்.906)***

என நிலத்தை நான்கு வகையாகப் பாகுபடுத்துகின்றார். எனினும் அது ஐந்தாக மாறிப்போனதை "பாலை" என்ற நிலப்பகுப்பு காட்டுகின்றது.

நிலத்தைப் பாகுபடுத்திக் கூறியதைப் போன்று "பொழுது" எனக் கூறப்படும் காலத்தையும் பிரித்துக் கூறுகின்றார். ஒரு ஆண்டின் பொழுதுகளைப் பெரும் பொழுது என்றும், ஒரு நாளின் பொழுதுகளைச் சிறுபொழுது என்றும் இருவகைப்படுத்தி பின்பு அதனை அறுவகையாக விவரித்துக் காட்டுகிறார். குறிப்பாக எந்த எந்த இடத்திற்கு எந்தெந்தக் காலம் பொருந்திவரும் என்பதையும் சுட்டிக் காட்டுவதன் மூலம் 2500 ஆண்டுகளுக்கு முன்பே காலம் குறித்த சிந்தனை நம் தமிழ்ச் சமூக மரபில் இருந்தமையை அறிந்துகொள்ள முடிகின்றது. சங்கப் பாடல்களில் அகமரபில் இடம்பெறும் "பகற்குறி, இரவுக்குறி" என்பனவும், போருக்குச் செல்லும் மன்னன் நாள்கோள் பார்த்துச் செல்வதும் இதன் முக்கியத்துவத்தைத் தெளிவாக்கும். இதனைத் தொடர்ந்து திருவள்ளுவரும் காலம், குறித்த சிந்தனையைப் பதிவு செய்துள்ளார்.

**கால மேலாண்மை**

கால மேலாண்மை அல்லது நேர மேலாண்மை என்றழைக்கப்படும் இச்சொல் நவீனயுகத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களின் மந்திரச்சொல். வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் காலத்தின் அலகு. வாழ்க்கையை ஏதேனும் ஒரு வகையில் அர்த்தப்படும் குறியீடுதான் காலம். "காலம் தான் ஆசிரியர்க்கெல்லாம் ஆசிரியர்" என்கிறார் ஃபேகன். (Time which is the author of Author & Facan) (காலம் எனும் காட்டாறு, ப.5)

கடந்த காலம் என்றாலே அது இழந்த காலம்தான். இன்று நாம் செலவிட்டுக் கொண்டிருக்கும் இந்த நாள் கூட நமக்கும் சாவுக்கும் இடையிலே பங்கிட்டுக் கொள்ளப்படத்தான் போகிறது என்கிறார் செனார்க்கா. (மேலது, ப.36)

"ஓர் அங்குலம் பொன்கொடுத்தாலும் ஓர் அங்குல நேரத்தை வாங்க முடியாது என்கிறது சீனப் பழமொழி.

நேற்று என்பது உடைந்த பானை; நாளை என்பது மதில்மேல் பூனை; இன்று என்பது உன்கையில் உள்ள வீணை என்கிறார் அப்துல்கலாம். இவ்வாறு காலத்தின் அருமையினை அறிஞர்கள் உணர்ந்து கூறியிருந்தாலும் இது பற்றிய சிந்தனை பாமரர்களிடமும் உள்ளது. இதனை, "ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்காது", "காலத்தே பயிர் செய்", "காலம் பொன் போன்றது" போன்ற பழமொழிகள் மூலம் அறியலாம். திரும்பப்பெற முடியாத விசயங்கள் பற்றிக் கூறும் போது, 'எய்து விட்ட அம்பு; பேசிவிட்ட பேச்சு; இழந்துவிட்ட நேரம்" என்ற மூன்றையும் குறிப்பிடுவர்.

"இருக்கும் காலம் சிறிதேயாம்" என்ற உமர்கய்யாமின் வரிகள் சிறிய காலத்தையும் முறையாக, சரியாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை நேர மேலாண்மையைக் குறிப்பிடக் காணலாம். இவ்வாறு காலத்தின் அருமை குறித்துப் பலரிடமும் பலவிதமான கருத்துக்கள் நிலவி வருகின்றதைக் காணமுடிகின்றது. இக்காலம் அறிதல் குறித்து வள்ளுவர், "அரசியல்" எனும் அதிகாரத்தில் அரசனுக்குச் சொல்வதாக இருந்தாலும் பொதுவாழ்வில் பணியாற்றுபவருக்கும், எடுத்த செயலில் வெற்றிபெற வேண்டும் என்று கருதும் தனி மனிதனுக்கும் காலத்தின் அருமை உணர்ந்து செயல்பட நினைக்கும் அனைவருக்கும் பொருந்திவரக் காணலாம்.

தன் வலிமை அறிந்திருந்தாலும் வினை செய்யும் காலம் அறிந்து செய்ய வேண்டும் என்பதால்தான் "வலியறிதல்" எனும் அதிகாரத்தின் பின் "காலமறிதல்" எனும் அதிகாரம் வைக்கப்பட்டுள்ளது. "காரியம் செய்வதற்கு ஏற்ற காலம்" என்பதே பெரும்பாலான உரையாசிரியர்களின் கருத்தாக உள்ளது. தேவநேயரோ "போர்மேற் செல்லும் காலம் என்றும் போருக்கு ஏற்ற காலம் என்றும்" உரை செய்கிறார். இதிலிருந்து நல்ல காலமும் தீயகாலமும் அறிதல் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

கடுங்கோடைகாலமும், மழையும், மிகுபனியும் போர்மேற் சேரற்கு விலக்கப்பட்ட காலங்களாகும். குறிப்பாகக் காலம் என்பது "வெம்மையும் குளிர்ச்சியும் தம்முள் ஒத்து, நோய் செய்யாது, தண்ணீரும் உணவும் முதலியன உடையதாய், தானை வருந்தாது செல்லும் இயல்புடையது "என்று பரிமேலழகர் கூறுவதன் வழி காலத்தின் சிறப்பு அறியப்படுகிறது. ஆக தட்பவெப்பநிலை சமமான காலமே போருக்கு ஏற்ற காலமாகும்.

காலமறிதல் ஆளுமைப் பண்பில் முக்கிய இடம் வகிக்கின்றது. காரணம் வெற்றியையே இலக்காகக் கொண்டு செயல்படும் காரியத்தில் திட்டமிடல், பொறுமையுடன் காத்திருத்தல், சூழலோடு ஒத்துப் போதல், இலக்கினை அடைய அமையும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் போன்றவை முக்கியமானதாகும். இவை அனைத்தும் காலத்தினை மையமாக வைத்தே இயங்குகின்றன.

### 1. இலக்கினை வரையறுத்துக்கொள்ளுதல்

குறிக்கோளற்ற வாழ்க்கை பாதையில்லா காட்டில் பயணம் செய்வதைப் போன்றது. ஆகவே ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நோக்கம், இலக்கு, இலட்சியம் முக்கியமானதாகிறது. வலியுடைய அரசனுக்கோ பகைநாட்டை கைக்கொள்ளுதலும், வெற்றி அடைதலும், தன் வலிமையை வீரத்தைப் பறை சாற்றுவதுமே முக்கிய நோக்கமாகும். இவ்விலக்கினை அடையக் காத்திருக்கும் மன்னனுக்கு "காலம்" கைகூட வேண்டும். இதனைத்தான் வள்ளுவர்,

**காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர் (485)**

என்கிறார். இங்கு "ஞாலம்" கைக் கொள்ளுதல் தான் மன்னனின் இலக்கு. தம் இலக்கினை அடைய கலங்காமல் காத்திருக்கும் மன்னன் எதற்காக காத்திருக்க வேண்டும்? உலகத்தை கைக்கொள்வதற்கு ஏற்ற காலத்திற்காகத் தான் என்பதை அறுதியிட்டுச் சொல்லலாம். காலமறியாமல் இரஷ்ய நாட்டின் மீது போர் தொடுத்த ஹிட்லர் தோல்வியடைந்தான் என்பது வரலாறாகும்.

### 2. திட்டமிடல்

காலத்தை வீணாக்கினால் அது ஒருவரது ஆற்றலை வீணாக்குகிறது. வாழ்க்கையை வீணாக்குகிறது. ஆகவே ஆளுமைப் பண்பில் "திட்டமிடல்" முக்கியப் பங்காற்றுகிறது. இத்திட்டமிடல் காலம் விரயமாவதிலிருந்து தடுக்கிறது. அன்றாடம் முடிக்கவேண்டிய பணி, முக்கியப்பணி, அவசரப்பணி, குறுகிய காலப்பணி எனத் திட்டமிட்டுக் கொள்வதே கால மேலாண்மை ஆகும். இதனை வள்ளுவர்,

**எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல் (489)**

என்கிறார். தான் திட்டமிட்ட காலம் கழிவதற்கு முன்பே செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து கொள்ள வேண்டும் என்று திட்டமிடுதலையும், செயலாற்றுதலையும் சுட்டிக் காட்டுவதை உணரலாம். மழைக் காலம் வருவதற்கு முன்பே உணவைச்

சேகரித்து வைக்கும் எறும்பின் வாழ்வில் கூட காலமறிந்து திட்டமிடும் பண்பு நிறைந்துள்ளதைக் காணமுடியும். மனிதனிடமும் அத்தகைய பண்பு அவசியம் இருக்க வேண்டும் என்பதுவே வள்ளுவரின் எண்ணமாகும்.

### 3. பொறுத்திருத்தல்

பொறுமை கடலினும் பெரிது, பொறுத்தார் பூமி ஆள்வார் போன்ற பழமொழிகள் பொறுத்திருத்தலின், பொறுமையின் அவசியத்தை எடுத்தியம்புகின்றன. நிதானம் ஆளுமைப் பண்பில் முக்கியப் பங்காற்றுகிறது. “பதறிய காரியம் சிதறும்” என்ற பழமொழி நிதானமாகச் செயல்பட வேண்டியதன் தேவையை உணர்த்தக் காணலாம்.

**பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து**
**உள்வேர்ப்பர் ஒள்ளி யவர் (487)**

இக்குறளை “காலம் பார்த்து புறம்வேரார்” என்றும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். அறிவுடையவர்கள் தம் பகைவர் குற்றம் செய்த பொழுதே அவர்கள் அறியப் புறத்து வெகுளார். அவர்களை வெல்லும் காலமறிந்து அந்தக் காலம் வருகின்றவரை மனதுக்குள்ளே வெகுள்வர். ஆகவேதான் வள்ளுவர் “பொள்ளென ஆங்கே புறம்வேரார்” என்கிறார்.

பொள்ளென என்பது அவசரமாகவோ, விரைவாகவோ, படபடப்பாகவோ செயல்படுதலைக் குறிக்கும். இங்கு யானையைப் போல வஞ்சனையுடன் காத்திருக்கவும் புலியைப் போல போர் புரியவும் “காலம்” வரும்வரை பொறுத்திருக்கச் சொல்வதைக் காணலாம்.

### 4. சூழலோடு ஒத்துப் போதல்

சூழலோடு ஒத்துப்போதல் என்பது ஆளுமை வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகிறது. இதனை “பருவத்தோடு ஒட்ட ஒழுகல்” என்கிறார் வள்ளுவர்.

**பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்குங் கயிறு (482)**

இங்கு “பருவம்” என்பது காலம் என்ற பொதுப் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. தனக்கு தளர்ச்சியற்ற காலம், மாற்றானுக்குத் தளர்ச்சியடையும் காலம் எனக் கொள்ளலாம். சீவக சிந்தாமணியில் கட்டியங்காரன் சச்சந்தன் மீது படையெடுத்தது அவன் காமப்பரவசனாயிருந்த காலமாகையால் “பருவம்” என்பது பருவ காலத்தை மட்டும் குறிப்பிடாமல் மாற்றானுடைய அரசு - ஒழுக்கம் - நட்பு முதலிய சூழ்நிலை கெட்டிருக்கிற பருவமும் சூழ்நிலையும் எனில் பொருந்தும்.

இதனைத்தான் ஆத்திச்சூடி பருவத்தே பயிர்செய் (பாடல்வரி-22) என்று கூறுகிறது. பருவத்தோடு ஒத்து வாழ்; நாள் செய்வன நல்லவர் செய்வார்; காற்றுள்ள போதே தூற்றிக்கொள் போன்ற பழமொழிகளும் இதனை மெய்ப்பிக்கின்றன.

இக்குறட்பா மன்னருக்கு மட்டுமல்ல சாமானியருக்கும் பொருந்தக்கூடியதாய் உள்ளது. அந்தந்தப் பருவகாலங்களில் கிடைக்கும் பொருட்களைப் பக்குவப்படுத்தி பயன்படுத்தும் வழக்கம் நம் பழந்தமிழ் மக்கள் முதல் இன்றுவரை தொடரக் காரணம் அவர்கள் “பருவத்தோடு ஒட்ட ஒழுகியமையே” எனில் பொருந்தும். மேலும்,

**ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேருந் தகைத்து (486)**

என்று காலம் வரும் வரை காத்திருத்தலின் தன்மை அல்லது விளைவு எத்தகையதாக இருக்கும் என்பதை “பாய்ச்சலுக்கு நிற்கிற ஆட்டுக்கிடா அதன் பகையெல்லாம் தீரப் பாய்வதற்காகப் பின்னோக்கிப் போவதற்கு” ஒப்பானதாகக் குறிப்பிடுகின்றார். இதனையே புலி பதுங்குவது பாய்வதற்குத்தான் என்பதனோடும் பொருத்திப் பார்க்கலாம்.

பின்னோக்கி இழுக்கப்படும் அம்புதான் வேகமாக முன்னோக்கிச் செல்லமுடியும். ஆக ஊக்கமுடையவன் ஒடுங்குவது பயந்து அல்ல, பாய்வதற்கான காலம் பார்த்து என்பதை அறியமுடிகின்றது.

### 5. வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுதல்

"To Seize the chance by its forelock" என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. வாய்ப்பு வரும்போது அதன் முன் குடுமியை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும். பின்புறம் பிடித்தால் வழுக்கிக்கொண்டு ஓடிப்போய் விடக்கூடும். ஆகவே பொறுத்திருக்கும் காலத்தில் கொக்கைப்போல அமைதியாக இருக்க வேண்டும். காலம் வாய்க்கும் போது மீனைக்கண்டால் கொக்கு எப்படி தன் அலகால் ஒரே குத்தாகக் கொத்தி அதனைப் பற்றிக் கொள்கிறதோ அதைப்போல செயலாற்ற வேண்டும் என்கிறார் வள்ளுவர். இதனை,

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து (490)**

என்ற குறள்வழி அறியலாம். இதனைத்தான்,

**அடக்கமுடையார் அறிவிலரென்றெண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்**
**ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு**
**(ஔவையார், வாக்குண்டாம், பா.16)**

என்ற ஔவையின் பாடல் வரிகளும் மெய்ப்பிக்கின்றன.

**பகல்வெல்லும் கூகையை காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது (481)**

கூகை வலியது, காகம் வலியற்றது, ஆயினும் வலிமையுடைய கூகையை வெல்ல காகத்திற்குத் துணைநிற்பது இங்கு பகற்பொழுதே! வலியற்றோருக்கும் காலம் துணையாய் நிற்பதை இங்கு காணமுடிகிறது. கூகை மற்றும் காகத்திற்குக் கண் தெரியாமலிருப்பதற்குக் காரணமும் "காலமே"!. ஆக தன்வலிக்கும் மாற்றான் வலிக்கும் காரணமாக அமைகின்ற காலத்தை வாய்ப்பாகக் கொண்டு செயல்பட்டால் வெல்லலாம் என்பது இதன் மூலம் அறியப்படுகின்றது.

### முடிவுரை

வெற்றியை இலக்காகக் கொண்டு, திட்டமிட்டு, பொறுமையைக் கடைப்பிடித்து, பருவத்தோடு பொருந்தி, வாய்ப்பினைத் தவறவிடாமல் பயன்படுத்திக்கொண்டால் எண்ணிய காரியத்தில் வெற்றி பெறலாம். இவை அனைத்தும் மனித ஆளுமையை வளர்க்கும் காரணிகளாக விளங்கக் காணலாம். ஆகவே வள்ளுவரின் காலம் குறித்த கருத்துக்கள் எல்லாக் காலத்திற்கும் எல்லா மனிதர்களுக்கும் பொருந்தக் காணலாம்.

### துணைநின்ற நூல்கள்

1. திருக்குறள், பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2007.
2. துரை. தண்டபாணி (உ.ஆ), நீதி நூல்கள், உமா பதிப்பகம், சென்னை, 2005.
3. மு.சண்முகம்பிள்ளை (ப.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், முல்லை நிலையம், சென்னை, 1998.
4. மு.தமிழ்க்குடிமகன், காலம் எனும் காட்டாறு, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2002.